Dr. H. V. HANDE : Sir, after the new Minister took over this department, has he had time to go into the problems of transport, whether it is not a fact that a number of people are complaining of inefficient service . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, போர்டு அமைக்கிறது பற்றித்தான். அதைப்பற்றிக் கேளுங்கள்.

Dr. H. V. HANDE : The supplementary question is directly connected with the subject.

I would like to have a clear-cut answer and request the Minister not to give an evasive answer. What are the complaints that he has received so far about transport, on what basis this board is going to function and whether the travelling facilities will be one of the subjects to which the board will address itself ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போர்டு அமைக்கிறதுபற்றித் தான் கேள்வி. நீங்கள் கேட்கிற தகவல்கள் மினிஸ்டரிடம் இருக்குமா ?

Dr. H. V. HANDE : Will the Minister be able to tell us the terms of reference of the Board and the basis on which it is going to function ?

The Hon. Thiru S. J. SADIQ PASHA : I have already answered that at present there is no proposal to constitute the board. My Friend said that there was a change of portfolio and that that might cause some improvement. I do not agree.

மலுமிச்சாம்பட்டி கிராமத்துக்குக் குளம்

■325 வினா—திரு. என். மருதாசலம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை தாலூக்கா, மலுமிச்சாம்பட்டி கிராமத்தில் உள்ள சர்க்கார் பள்ள வாரி புறம்போக்கு சர்வே 648, 213, 212 எண்ணுள்ள 11 ஏக்கர் 98 செண்டு நிலத்தில் குளம் வெட்டவேண்டி அக் கிராம விவசாயிகள் 12—8—1968 அன்று சர்க்காருக்கு விண்ணப்பம் அனுப்பினார்களா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம். நில அளவை எண் 648, 212, 213-இல் குளம் ஒன்றை வெட்ட வேண்டுமென வேண்டி அனுப்பப்பட்ட முறையீடு ஒன்று மாவட்ட ஆட்சித் தலைவரால் பெறப்பட்டு, அது கோயம்புத்தூர் கோட்ட நிர்வாகப் பொறியாளருக்கு அனுப்பப்பட்டது.

(இ) இந்தப் பணி குறித்த செயற்குறிப்புகள் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, இப்பணிக்காக "வறட்சித் தணிப்பு பணிகளின்" கீழ் ரூபாய் 79,000 செலவிட இசைவு அளிக்கப்பட்டுள்ளது.

1970 மார்ச் 11]

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, அந்தப் பூமியிலே இப்பொழுது குளம் கட்டியாகிவிட்டது. அதற்கு அரசாங்கத்திற்கு நன்றி தெரிவிக்கிறேம்.

Panchayat Elections

* 326 *Q*.—TIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have postponed the Panchayat Elections in this State; and

(*b*) if so, for what reasons?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ஆம்.

(இ) ஊராட்சி வாக்காளர் பட்டியல் ஒன்றைத் தனியே தயாரித்து அச்சிட்டு வெளியிடுவதற்கும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும் உள்ள ஊராட்சிகளைச் சீரமைத்து, சிறு பிரிவுகளாக மீண்டும் தொகுப்பதற்கும் இயலும்படிச் செய்வதற்காக 1970-ம் ஆண்டின் தொடக்கத்தில் ஊராட்சிகளுக்கு நடக்க வேண்டிய சாதாரணத் தேர்தல்களைச் சில மாதங்கள் ஒத்திப்போட அரசு முடிவு செய்துள்ளது.

திரு. கே. விநயகம்: அப்படி ஒத்திப்போடப்பட்ட தேர்தல் இறுதியாக எப்பொழுது நடக்கும்? இன்னும் பல பஞ்சாயத்துக்கள் தாங்கள் பிரிந்து போக வேண்டுமென்று மனுக்களை அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்களே, அவைகளைப்பற்றி இறுதியான முடிவை அரசாங்கம் எடுத்துவிட்டதா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவரவர்களே, இந்தத் தேர்தல்கள் ஜூலை மாதத்தில் கடைசி வாரத்திற்குள்ளாக நடத்தி முடிக்க வேண்டுமென்று அதற்கான ஆயத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. ஊராட்சி மன்றங்களைப் பிரிப்பது சம்பந்தமான காரியங்கள் அநேகமாக முடிவுற்ற நிலையில் இருக்கின்றன. மேற்கொண்டும் புதிதாக ஊராட்சிகளைப் பிரிப்பதுபற்றிய தகவல்களை இனிமேலும் அனுப்பினால் காலதாமதம் ஆகும் என்பதால், தேர்தலுக்கு முன்னால் அனுப்ப வேண்டாமென்று எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவிலே, குறிப்பாக இந்தப் பஞ்சாயத்து சீரமைப்பு பற்றி பல ஆட்சேபனைகள் தெரிவித்த விண்ணப்பங்கள் அனுப்பியிருக்கிறார்களா? அவற்றை அரசாங்கம் பரிசீலிப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவரவர்களே, ஏற்கெனவே, மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கே இருக்கிற மாவட்ட அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டி, அதனுடைய கருத்துக்களைக்